முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2020 யூலை

## (203) வியாபாரச் சட்டம்

(Business Law)

2020-10-03
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):
  - (1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  - (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே விடையளித்தல்** வேண்டும்.*
  - (4) *நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  - (5) *வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச்சொல் பட்டியல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **வினைச்சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தின்** அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (6) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.6** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** இலங்கையிலுள்ள சட்டங்களின் மிகவுயர்ந்த மூலமாக (most supreme source) இருப்பது :

(1) சிவில் சட்டம் (2) குற்றவியல் சட்டம்
(3) அரசியலமைப்பு (4) வழக்குச் சட்டம் (Case Law)

**1.2** பின்வருவனவற்றுள் பொருட்கள் விற்பனை ஒப்பந்தமொன்றின் ஒரு கூறாக (element) **அமையாதது** எது?

(1) விலை (2) உரிமை மாற்றம்
(3) பொருட்கள் (4) அமைவிடம்

**1.3** பின்வருவனவற்றுள் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ஒரு கொடுப்பனவு முறையாக **அமையாதது** எது?

(1) நாணயக் கடிதம் (2) காசோலைகள்
(3) மாற்றுண்டியல் (4) முற்கொடுப்பனவு

**1.4** 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் (EPF) சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படாத ஊழியர்கள் :

(1) அமய ஊழியர்கள் (2) தற்காலிக ஊழியர்கள்

(3) அரசாங்க ஊழியர்கள் (4) நிரந்தர ஊழியர்கள்

**1.5** **அமல்** என்பவர் ரூபா 40,000/- என்ற மாதாந்தச் சம்பளத்தில் நிறைவேற்று உத்தியோகத்தராக 2010 ஏப்ரல் 01 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட ABC (தனி.) கம்பனியில்** இணைந்து கொண்டார். அவர் 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி முகாமையாளராகப் பதவியுயர்த்தப்பட்டார். அவர் 2020 ஏப்ரல் 10 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட ABC (தனி.) கம்பனியிலிருந்து** இராஜினாமாச் செய்ததுடன் அவரது இறுதி மாதச் சம்பளம் ரூபா 150,000/- ஆகக் காணப்பட்டது.

பணிக்கொடை உரித்தாகச் (gratuity entitlement) செலுத்தப்பட வேண்டிய தொகை :

(1) ரூபா 200,000/-. (2) ரூபா 750,000/-.

(3) ரூபா 1,500,000/-. (4) ரூபா 150,000/-.

**1.6** 1950 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின்படி, பிணக்குத் தீர்க்கும் ஒரு முறையாக இருப்பது பின்வருவனவற்றுள் எது?

(1) கூட்டு உடன்படிக்கை ஒன்றின் மூலம் (2) கைத்தொழில் நீதிமன்றங்கள் மூலம்

(3) சமரசத்தின் மூலம் (4) மேலுள்ள சகலதும்

(02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)

*கீழே **1.7** தொடக்கம் **1.9** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் (**சரியானது / தவறானது**) குறிப்பிடுக.*

**1.7** இலங்கையில் பொதுச் சட்டமாக இருப்பது ரோமன் - டச்சுச் சட்டமாகும்.

**1.8** ஒப்பந்தமொன்று, வாங்க முற்படுபவரது (offeree) இறப்பு காரணமாக ஏற்படும் நிலைகுலைவினால் தள்ளுபடி செய்யப்படலாம்.

**1.9** விற்பனையாளர் ஒருவர் கொள்வனவாளருக்கு பொருட்களை விநியோகம் (deliver) செய்வதைப் புறக்கணிக்கத்தக்க வகையில் மறுப்புத் தெரிவிக்கும்போது, விநியோகம் செய்யப்படாத பொருட்கள் மீதான நட்டத்திற்கு உரிமைக்கோரிக்கை (claim) செய்வதற்கு கொள்வனவாளர் சட்டப்படியான உரிமையைக் கொண்டிருக்க மாட்டார். (01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

***1.10** தொடக்கம் **1.14** வரையுள்ள வினாக்களுக்கு குறுகிய விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.10** முதலீட்டுச் சபையின் இரண்டு (02) தொழிற்பாடுகளைக் (functions) குறிப்பிடுக.

**1.11** பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், வாங்குபவர் (buyer) ஒருவருக்கு இருக்கக் கூடிய இரண்டு (02) பரிகாரங்களைக் (remedies) குறிப்பிடுக.

**1.12** ஊழியர் ஒருவர், ஊழியர் நம்பிக்கை நிதி மீதியினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய இரண்டு (02) சந்தர்ப்பங்களைப் பட்டியலிடுக.

**1.13** வார்நாமத்தில் (Bill of Lading) உள்ளடக்கப்பட வேண்டிய இரண்டு (02) முக்கிய விடயங்களைப் (points) பட்டியலிடுக.

**1.14** நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் இரண்டு (02) நோக்கங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

(a) **ராஜா, நிமால்** மற்றும் **சுமணா** ஆகியோர் நாடுபூராகவும் உள்ள சிறியளவான விற்பனையாளர்களிடமிருந்து மசாலாப் பொருட்களை வாங்கி அவற்றை **''ஹெலறஸ''** என்ற வர்த்தகக் குறியீட்டுடன் பொதியிட்டு விற்பனை செய்யும் வியாபாரமான ''**ஹெலறஸ பங்குடமை**'' யின் பங்காளர்கள் ஆவர். அவர்கள் பங்குடமையை நடத்திச்செல்வதற்கான விடயங்களைக் கையாள்வதற்கு 1890 ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்ட ஏற்பாடுகளைப் பின்பற்றுகின்றனர். **சுமணா,** பங்குடமை வியாபாரத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தொடர்புகளைப் பயன்படுத்தி தனது கணவருடன் சேர்ந்து அதேபோன்ற ஒரு வியாபாரத்தை ஆரம்பித்துள்ளார். எவ்வாறாயினும், அது பற்றி **சுமணா**வால் மற்றைய பங்காளர்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**சுமணா** ஒரு பங்காளர் என்ற வகையில் தனது கடமைகளை மீறியுள்ளாரா என்பதை **விபரிக்குக.**

(06 புள்ளிகள்)

(b) **ஹெலறச பங்குடமை** தொடரப்படுகின்ற அதே வேளை, **நிமால்** கடனடிப்படையில் ரூபா 500,000/- பெறுமதியான கறுவா மற்றும் மிளகு ஆகியவற்றை வழமையான ஒரு வழங்குநரான **பியால்** என்பவரிடமிருந்து மொத்தமாக வாங்கி அவற்றை இன்னுமொரு மூன்றாந் தரப்பு வாங்குநருக்கு ரூபா 600,000/- இற்கு விற்பனை செய்துள்ளார். பெறப்பட்ட தொகை தவறுதலாக அவருடைய மனைவியின் தனிப்பட்ட கணக்கிற்கு வைப்பிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அந்தப் பணத்திலிருந்து அவரது (மனைவியின்) தனிப்பட்ட கடனுக்கான இரண்டு தவணைக் கட்டணங்களுக்குரிய பணத்தை வங்கி வசூலித்துக் கொண்டதுடன் தற்போது அந்தப் பணம் அவரது (மனைவி) கணக்கில் இல்லை.

**பியால், ஹெலறஸ பங்குடமை**யிடமிருந்து தனக்கு வழங்க வேண்டிய பணத்தினைக் கோரியதுடன் **ராஜாவும் சுமணாவும் பியாலுக்கு** பணம் செலுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்தனர்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

**பியால், ஹெலறஸ பங்குடமை**யிடமிருந்து தனது பணத்தை வசூலிப்பதற்கான (recover) சட்ட உரிமையைக் கொண்டிருக்கிறாரா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம 10 புள்ளிகள்)

## வினா 03

**குமுது** என்பவர் **மரக் கடை** ஒன்றின் உரிமையாளர் ஆவார். அவர் தனது வியாபாரத்தை முகாமை செய்யவும் இலாபத்தில் இயக்குவதற்குவதற்குமென **மலாகா** என்பவருக்கு அதிகாரம் அளித்துள்ளார். அவர்களின் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கருங்காலி மரத்தை விற்பனை செய்யக்கூடாது என **மலாகா** தெளிவாக அறிவுறுத்தப்பட்டுள்ளார். மேலும், வியாபார வளாகத்தின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகள் தொடர்பில் ஒப்பந்தத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. வியாபார வளாகத்தில் உள்ள நீர்க் குழாய் அமைப்பானது திடீரென சேதமடைந்ததை அடுத்து **மலாகா** கடன் அடிப்படையில் நீர்க் குழாய் அமைப்பைப் பழுதுபார்ப்பதற்கென நீர்க்குழாய்ப் பொருத்துநரான (plumber) **பொடி பாஸ்** என்பவரை வாடகைக்கு அமர்த்தினார். பின்னர், **பொடி பாஸ்** தனது கட்டணத்தை **மலாகாவிடம்** கோரியிருந்தார். **மலாகாவுக்கு** அதற்கான அதிகாரத்தைத் தாம் வழங்கியிருக்கவில்லை என்ற காரணத்தால் **பொடி பாஸ்** இற்குக் கொடுக்க வேண்டிய தொகையை செலுத்தக்கூடாது எனக் **குமுது** தெரிவித்திருந்தார்.

அதே வேளை, **மலாகா, ரேணுகா** என்பவருக்கு கருங்காலி மரக் குற்றி ஒன்றினை விற்பனை செய்தார். அது உண்மையான கருங்காலி மரக்குற்றி அல்ல என்பதை பின்னர் அறிந்துகொண்ட **ரேணுகா, குமுது**விடமிருந்து நட்டஈட்டினைக் கோரியிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **குமுது** மற்றும் **மலாகா** இடையிலான முகவராண்மை உறவின் தன்மையை (nature of Agency relationship) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **குமுதுவின்** முகவராக **மலாகாவால்** மேற்கொள்ளப்பட்ட பின்வரும் ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றின் கீழும் **குமுதுவின்** பொறுப்பினை **ஆராய்க :**

(i) **பொடி பாஸ்** உடனான ஒப்பந்தம்

(ii) **ரேணுகாவுடனான** ஒப்பந்தம் (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) **ஆன்** என்பவர் **வரையறுக்கப்பட்ட XYZ காப்புறுதிக் கம்பனி** மற்றும் **வரையறுக்கப்பட்ட ABC காப்புறுதிக் கம்பனி** ஆகியவற்றிடமிருந்து தனது வீட்டிற்கான இரண்டு தீ அபாயக் காப்புறுதிகளைப் பெற்றுக்கொண்டார். **வரையறுக்கப்பட்ட XYZ காப்புறுதிக் கம்பனி** மற்றும் **வரையறுக்கப்பட்ட ABC காப்புறுதிக் கம்பனி** ஆகியவற்றில் முறையே ரூபா 3 மில்லியன் மற்றும் ரூபா 4 மில்லியனுக்கு காப்புறுதிகள் பெறப்பட்டுள்ளன. மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்ட தீப் பரவலினால் வீடு சேதமடைந்ததுடன் அதனால் ஏற்பட்ட இழப்பு ரூபா 500,000/- ஆகும். **ஆன்** இரண்டு காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தும் தலா ரூபா 500,000/- வீதம் சேதத்திற்கான உரிமைக்கோரிக்கையை (claim) செய்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

இரண்டு காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து தலா ரூபா 500,000/- வீதம் உரிமைக்கோரிக்கை செய்வதற்கு **ஆன்** உரித்துடையவரா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) வாடகைக்குப் பெறுபவர் மற்றும் பொருளின் உரிமையாளர் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையேயான உடன்படிக்கைகள் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகள் ஆகும். இந்த வகை ஒப்பந்தம் ஒன்றில், தரப்பினரிடையே ஒப்புக்கொள்ளப்பட்ட வாடகைக் கொடுப்பனவுகளின் முடிவில் உருப்படியைக் கொள்வனவு செய்வதற்கான தெரிவுடன் பொருளின் உரிமையாளரிடமிருந்து ஒரு குறித்த உருப்படியை வாடகைக்குப் பெறுபவர் வாடகைக்கு எடுத்துக் கொள்கின்றார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்று தொடர்பில் வாடகைக்குப் பெறுபவர் ஒருவரின் மூன்று (03) கடப்பாடுகளையும் (obligations) பொருளின் உரிமையாளரது ஒரு (01) கடப்பாட்டினையும் **குறிப்பிடுக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) **தீனா** என்பவர் கொழும்பு 05 இல் உள்ள தனது புதிய வீட்டின் உள்ளக வடிவமைப்பைச் செய்வதற்காக **பிரியா** என்பவரை வாடகைக்கு அமர்த்தியுள்ளார். செயற்றிட்டத்தின் நிறைவில், **தீனாவுக்கு** தான் வழங்கிய சேவைக்கான ஒப்புக்கொண்ட கொடுப்பனவாக ரூபா 300,000/- பெறுமதியான "*கைமாறத்தகாதது*" எனக் குறுக்குக் கோடிடப்பட்ட ஒரு காசோலையை **தீனாவிடமிருந்து பிரியா** பெற்றுக்கொண்டார். **பிரியா** வங்கியின் கருமபீடத்தில் (counter) காசோலையைச் சமர்ப்பித்து காசினைப் (cash) பெறுவதற்காக வங்கிக்குச் சென்றுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(i) கருமபீடத்தில் காசோலையைச் சமர்ப்பித்து காசினைப் பெறுவதற்கு **பிரியாவுக்கு** உரித்துள்ளதா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(ii) வாடிக்கையாளர் ஒருவரால் கட்டளையிடப்பட்ட காசோலை ஒன்றிற்கான கொடுப்பனவை மறுப்பதற்கு வங்கியானது அதிகாரத்தைக் கொண்டிருக்கின்ற மூன்று (03) சந்தர்ப்பங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) **லலிதா** என்பவர் **அரலியா டெக்ஸ்டைல்ஸ்** என்ற ஒரு புகழ்பெற்ற ஆடை விற்பனை நிலையமொன்றில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் பணிக்குச் சேர்ந்தார். கடந்த வாரம், அவர் தனது இரண்டாவது குழந்தையை அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் பிரசவித்திருந்தார். அவர் பிரசவ லீவுக்கான கோரிக்கையை அனுப்பியபோது, **அரலிய டெக்ஸ்டைல்ஸ்** இன் உரிமையாளரால் அவருக்கு சம்பளத்துடன்கூடிய பிரசவ லீவு வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டதுடன் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அவருடைய தொழில் முடிவுறுத்தப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் கீழ், சம்பளத்துடன்கூடிய பிரசவ லீவினைப் பெற்றுக்கொள்வதற்கு **லலிதாவுக்கு** உரித்துள்ளதா என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(a) 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின்படி, நிதி நிறுவனங்கள், கணக்கு வைத்திருப்பவரை அடையாளங்காண முடியாதவிடத்து, அத்தகைய ஒரு கணக்கினைத் திறக்கவோ, இயக்கவோ அல்லது பேணவோ கூடாது. அதற்கிணங்க, வாடிக்கை யாளர்கள் புதிய கணக்குகளைத் திறக்கும்போது அத்தகைய நிறுவனங்களால் அவர்களிடமிருந்து குறிப்பிட்ட தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

நிதி நிறுவனம் ஒன்றினால் புதிய கணக்கொன்று திறக்கப்படும்போது தனியாள் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஆவணங்களின் மூன்று (03) வகைகளைக் **குறிப்பிடுக.**

(03 புள்ளிகள்)

(b) 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பணச் சலவைத் தடுப்புச் சட்டம் (Prevention of Money Laundering Act) மற்றும் 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிக் குற்றங்கள் சட்டம் (Computer Crimes Act) என்பன மாறுகின்ற வியாபாரச் சூழலில் முக்கியமான சட்டங்கள் ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(i) பணச் சலவைத் தடுப்புச் சட்டத்தின்படி, சட்டவிரோத நடவடிக்கைகள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(ii) கணினிக் குற்றங்கள் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள மூன்று (03) குற்றங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம 25 புள்ளிகள்)

### வினா 07

(A) **வைத்தியர் பெரேரா** என்பவர் தனது பாரம்பரிய மருத்துவச் சிகிச்சைகளுக்கான ஒரு சேர்வைப் பொருளாக "*தவுல் குருந்து*" என்ற இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கறுவா வகை ஒன்றைப் பயன்படுத்துகின்ற ஓர் ஆயுர்வேத வைத்தியர் ஆவார். அவர், பெப்ரவரி 17 ஆந் திகதி, காலியில் வசிக்கின்ற **பண்டா** என்ற கறுவா வழங்குநர் ஒருவரைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, கிலோகிராம் ஒன்று ரூபா 1000/- விலையில் 50 கிலோகிராம் "*தவுல் குருந்தினைத்*" தனக்கு வழங்குமாறு கேட்டிருந்தார். இதனை ஏற்பதா அல்லது நிராகரிப்பதா என்பது பற்றிய ஒரு கடிதத்தை தபால் மூலம் அனுப்புவதற்கு **பண்டா** இணக்கம் தெரிவித்திருந்தார். பெப்ரவரி 18 ஆந் திகதி, கேட்கப்பட்ட அதே விலையில் கேட்கப்பட்ட அதேஅளவு "*தவுல் குருந்துவை*" வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்து **வைத்தியர் பெரேராவுக்கு பண்டா** அவர்கள் கடிதம் ஒன்றைத் தபாலில் இட்டிருந்தார். அந்தக் கடிதம் பெப்ரவரி 21 ஆந் திகதி **வைத்தியர் பெரேராவின்** இல்லத்தை வந்தடைந்தது. அதே நேரம் பெப்ரவரி 19 ஆந் திகதி, கிலோகிராம் ஒன்று ரூபா 900/- விலையில் கூறப்பட்ட அதேயளவை வழங்கல் செய்வதற்கு மற்றுமொரு கறுவா வழங்குநரான **சிவா** என்பவரிடம் **வைத்தியர் பெரேரா** கோரிக்கை விடுத்திருந்ததுடன் அது **சிவாவினால்** ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. பெப்ரவரி 22 ஆந் திகதி காலையில், **வைத்தியர் பெரேராவின்** இல்லத்திற்கு கோரிக்கையிடப்பட்ட 50 கிலோகிராம் கறுவாவுடன் **பண்டா** வருகை தந்திருந்தார். ஆயினும் **வைத்தியர் பெரேரா** அவர்கள் **பண்டாவின்** கறுவாவினை நிராகரித்திருந்தார்.

அதேசமயம், தலைமுடி நீளமாக வளர்வதற்குப் பயன்படுத்தக்கூடிய "*தவுல் குருந்துவின்*" பிரித்தெடுப்புகளை **வைத்தியர் பெரேரா** கண்டுபிடித்ததுடன் **"Black & Long"** என்ற பெயரில் பொருள் ஒன்றையும் அவர் விருத்தி செய்துள்ளார். அவர் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டு செய்தித்தாள்களில் விளம்பரமொன்றைப் பிரசுரித்துள்ளார்.

"பொருளுடன் வழங்கப்படும் அச்சடிக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு
இணங்க, 6 நாட்களுக்கு தினசரி 3 வேளைகள் **Black & Long** இனைப்
பயன்படுத்திய பின்னர் நபர் ஒருவர் தனது முடியை இழப்பின்
அல்லது முடியில் சேதம் ஏற்படின் அந்த நபருக்கு **வைத்தியர்
பெரேராவினால்** ரூபா 100,000/- வெகுமதி அளிக்கப்படும்."

மிக அண்மையில் தேசிய தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் நடைபெறவிருக்கின்ற "*அவுருது குமாரி ஒப்பனை அலங்காரப் போட்டியில்*" (அழகுராணிப் போட்டி) பங்குபற்றுவதற்கு திட்டமிட்டுள்ள **விசாகா** என்பவர் ஒரு போத்தல் **Black & Long** இனை வாங்கி, குறித்துரைக்கப்பட்டிருந்த (வழிகாட்டப்பட்டிருந்த) அதே முறையில் அதனைப் பிரயோகித்திருந்தார். அதனைப் பிரயோகித்ததன் பின்னர், ஏழாவது நாள், **விசாகா** தலைமுழுகியதன் (தலைக்குக் குளித்ததன்) பின்னர் அவரது சொந்த நீண்ட தலைமுடியில் கிட்டத்தட்ட மூன்றிலொரு பங்கினை இழந்திருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) பின்வருவனவற்றை **விபரிக்குக** :

(i) **வைத்தியர் பெரேராவுக்கும் பண்டாவுக்கும்** இடையில் வலிதான (செல்லுபடியான) ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா (04 புள்ளிகள்)

(ii) **வைத்தியர் பெரேராவுக்கும் விசாகாவுக்கும்** இடையில் வலிதான ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா (04 புள்ளிகள்)

(b) **வைத்தியர் பெரேரா** தொடர்பில் **பண்டாவுக்கும் விசாகாவுக்கும்** கிடைக்கக்கூடிய உரிமைகளையும் பரிகாரங்களையும் (rights and remedies) **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(B) மொத்த விற்பனையாளரான **ரவி** என்பவரிடமிருந்து 100 கிலோகிராம் பருப்பினை **மோகன்** என்பவர் திங்கட்கிழமை வாங்கினார். **ரவி** அதனை விநியோகிப்பதற்கு ஆயத்தமானபோது, தான் புதன்கிழமை வந்து அவற்றைத் தனது களஞ்சியத்திற்குக் கொண்டுசெல்லும் வரை **ரவியின்** களஞ்சியத்திலேயே பருப்பினை வைத்திருக்குமாறு **ரவியிடம் மோகன்** கோரிக்கை விடுத்திருந்தார். **மோகனது** கோரிக்கையின்பேரில், **ரவி** அந்தப் பருப்பினை வேறாக தனது களஞ்சியத்தில் வைத்திருந்தார். செவ்வாய்க்கிழமை இரவு, அந்தப் பகுதியில் கடும் மழை பெய்ததால் **ரவியின்** களஞ்சியம் வெள்ளத்தில் மூழ்கியது. **மோகன்** தனது பணத்தை மீளத் தருமாறு கேட்டதுடன் பருப்பினை எடுப்பதற்கு மறுத்து விட்டார்.

அதன் பின்னர் **ரவி,** வெள்ளத்தினால் அசுத்தமடைந்த 100 கிலோகிராம் பருப்பினை உணவு வழங்குகின்ற வியாபாரத்தை முன்னெடுத்துச் செல்லும் **ஜோன்** என்பவருக்கு விற்பனை செய்தார். **ரவி,** பருப்பு என்ன நிலையில் இருக்கிறது என்பது பற்றி **ஜோன்** இற்குத் தெரிவித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், மனிதர்களுக்கு வழங்கக்கூடிய தரத்தில் பருப்பு காணப்படவில்லை என்பதை **ஜோன்** பின்னர் கண்டுபிடித்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்திற்கிணங்க, பின்வருவனவற்றை **ஆராய்க** :

(a) **மோகனின்** சட்ட உரிமைகள் (05 புள்ளிகள்)

(b) **ஜோனின்** சட்ட உரிமைகள் (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |